செய்தி வெளியீடு எண் : 12 நாள் : 16.12.2019

**தேனி மாவட்டம்**
**தேர்தல் குறித்த புகார் மற்றும் விபரங்களை**
**நேரில் தெரிவிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் தேனி மாவட்ட தேர்தல் பார்வையாளராக திருமதி எம்.ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் (இயக்குநர் - எரிசக்தி மேம்பாட்டுத்துறை) நியமிக்கப்பட்டுள்ளார் -**
**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப. அவர்கள் தகவல் :-**
*******

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் வருகின்ற 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய தினங்களில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் 10 ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள், 98 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்கள், 130 ஊராட்சி மன்ற தலைவர் பதவியிடங்கள் மற்றும் 1161 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் என மொத்தம் 1399 பதவியிடங்களுக்கு 870 வாக்குசாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

மேலும், பொதுமக்கள் உள்ளாட்சித் தேர்தல் குறித்த புகார்கள் மற்றும் விபரங்களை தெரிவிப்பதற்கென உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான கட்டுப்பாட்டு அறை தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது, மேலும் தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தினால் உள்ளாட்சி தேர்தலுக்கென தேனி மாவட்டத்தில் தேர்தல் பார்வையாளராக திருமதி எம்.ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் (இயக்குநர் - எரிசக்தி மேம்பாட்டுத்துறை) அவர்கள் நியமிக்கப்பட்டு, இன்றைய தினம் (16.12.2019) வருகைபுரிந்துள்ளார். உள்ளாட்சி தேர்தல் குறித்து பொதுமக்கள் ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால் தேனி அரசு விருந்தினர் மாளிகையில் நேரில் புகார் தெரிவிக்கலாம். அல்லது அவர்களது அலைபேசி எண்ணில் 93852 86480 தொடர்புகொள்ளலாம்.

தேனி அரசு விருந்தினர் மாளிகையில் தினமும் மாலை 05.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை நேரில் சந்திக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**